**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2020**

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதிதாசன் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ்கள் யாவை?
2. கெடுக்கிற நோக்கம் வளராமலும் மனம் கீழும் மேலும் புரளாமலும் இருக்கப் பட்டுக் கோட்டையார் கூறுவதென்ன?
3. கண்ணதாசனின் படைப்புகளுள் சாகித்திய அகாதமி விருது பெற்றது எது?
4. பிச்சமூர்த்தியின் கிளிக்கூண்டு என்பது எதனைக் குறிக்கின்றது?
5. கவிஞர் சிற்பியின் படைப்புகள் இரண்டினைக் கூறுக.
6. கேரளத்து சூரியன் எனக் கவிஞர் சிற்பியால் போற்றப்பட்டவர் யார்?
7. புதுமைப்பெண் ஏற்பதும் எதிர்ப்பதும் எது?
8. மணிக்கொடிக் கவிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.
9. விதை போல் விழுந்தவன் என்ற உவமைத்தொடர் யாரைக் குறிப்பிடுகிறது?
10. அகப்பொருள் சிற்றிலக்கியங்களுக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.
11. சிற்றிலக்கியங்களில் நயனப்பத்து என்றால் என்ன?
12. முதல் உலா இலக்கிய நூல் எது? அதனை இயற்றியவர் யார்?
13. திருநாவலூர்க் கலம்பக நூலில் மட்டுமே இடம்பெற்றுள்ள கலம்பக உறுப்பு யாது?
14. தஞ்சைவாணன் பகைவரை எவ்விதம் அழித்தான்?
15. அற்புதத்திருவந்தாதி எந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ளது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பட்டுக்கோட்டையாரின் பாடல்களில் வெளிப்படும் பொதுவுடைமைக் கருத்துக்களை எழுதுக.
2. பாரதியாரின் பாடல்களில் வெளிப்படும் இந்திய தேசியச் சிந்தனைகள் சிலவற்றை இயம்புக.
3. புதுக்கவிதை வளர்ச்சிக்கு வானம்பாடி இதழ் ஆற்றிய பணிகளைக் கூறுக.
4. போலிக் குருமார் குறித்து கவிஞர் ஈரோடு தமிழன்பன் கூறுவன யாவை?
5. கவிஞர் சிற்பியின் கவிதைகளில் வெளிப்படும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை குறித்த கருத்துக்களைக் கூறுக.
6. திருமாலின் பெருமைகளாக பெரிய திருமடலில் கூறப்படுவனவற்றை எழுதுக.
7. விக்கிரம சோழனின் சிறப்புகள் யாவை?
8. சிவபெருமானின் திருவருள் திறம் குறித்து அற்புதத்திருவந்தாதியில் கூறுவனவற்றை எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதிதாசன் தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கவிஞர் என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) நாமக்கல் கவிஞரின் பாடல்களில் வெளிப்படும் காந்தியச் சிந்தனைகளை எடுத்துரைக்க.

2. (அ) கவிஞர் முடியரசனின் கவிதைகளில் வெளிப்படும் சமூகக் கருத்துக்களை விவரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) கவிஞர் மஹாகவியின் கவிதைகள் குறித்து தொகுத்துரைக்க.

3. (அ) பாரதிதாசனின் பன்முகத்தன்மையும் பிள்ளைத்தமிழ் இலக்கணமும் பாவேந்தர் பிள்ளை தமிழில் வெளிப்பட்டுள்ளமை குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தூது இலக்கியங்களில் தமிழ்விடு தூது தனிச்சிறப்பு பெற்றது என்னும் கூற்றை மெய்ப்பிக்க.

***